வாக்களித்தவர்களுக்கும், வாக்களிக்காதவர்களுக்கும் கழகத் தலைவர் – முதல்வர் செய்த சாதனைகளால்

# கோவை வாக்காளப் பெருமக்கள் மகத்தான வெற்றியைத் தருவார்கள்!

## மாவட்டச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி செய்தியாளர்களிடம் உறுதி!

**கோவை, ஏப்.1-**

**கடந்த சட்டமன்ற தேர்தலில் தி.மு.கழகத்திற்கு வாக்களித்தவர்களுக்கும், வாக்களிக்காதவர்களுக்கும் பாரபட்சம் பார்க்காமல் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செய்த சாதனைகளால் கோவை வாக்காளப் பெருமக்கள் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு ஒரு மகத்தான வெற்றியை வழங்குவதற்கு தயாராக இருக்கின்றார்கள் என்று கோவை தெற்கு சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர், மேற்கு மண்டல பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி செய்தியாளர்களிடம் பெருமிதத்துடன் கூறினார்.**



*அவர் கூறியதாவது:*

*கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க கோவை தெற்கு சட்டமன்ற தொகுதி வேட்பாளராக திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டு தேர்தல் பணிகளுக்கான தலைமை அலுவலகத்தை இன்று திறந்து வைத்து எங்களுடைய பணிகளை முன்னெடுத்திருக்கின்றோம். வரக்கூடிய 23ம் தேதி நடைபெறுகின்ற சட்டமன்ற தேர்தலுக்கான இந்த பணிகளில் கோவையில் இருக்கக்கூடிய 10 தொகுதிகளும் திராவிட முன்னேற்றக் கழக தலைவர், தளபதி அவர்களின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி மகத்தான வெற்றி பெறுவதற்கான பணிகளை நாடாளுமன்ற தேர்தல் முடிந்தவுடன் நாங்கள் தொடங்கி இருக்கின்றோம், குறிப்பாக "ஓரணியில் தமிழ்நாடு" உறுப்பினர் சேர்க்கை, வாக்காளர் பட்டியலுடைய அந்த திருத்தங்கள் உள்ளிட்ட பல்வேறு பணிகளை நாங்கள் முன்னெடுத்து ஒவ்வொரு வீடு வாரியாக சென்று வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பது, "ஓரணியில் தமிழ்நாடு" உறுப்பினர் சேர்க்கையை முன்னெடுப்பது அதற்குப் பிறகு பல்வேறு சிறப்பு திட்டங்களை மக்களிடத்திலே கொண்டு சென்று சேர்ப்பது உள்ளிட்ட பணிகளை முன்னெடுத்து மிகச் சிறப்பாக செய்துள்ளோம்,*

*மக்களுடைய எண்ணம் மீண்டும் தமிழகத்தில் இரண்டாவது முறையாக முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்க வேண்டும் என்று உறுதியோடு இருக்கின்றார்கள். அந்த வகையில் கோவை வாக்காளப் பெருமக்கள் ஒரு மகத்தான வெற்றியை வழங்குவதற்கு தயாராக இருக்கின்றார்கள். என்னை பொறுத்தவரை 2006ம் ஆண்டு தொடங்கி கரூர் தொகுதியில் போட்டியிட்டு வந்த சூழ்நிலையில் எங்களுடைய கழகத் தலைவர் அவர்கள் கோவை தெற்கு தொகுதியில் போட்டியிடுவதற்கான வாய்ப்பை தந்திருக்கின்றார்கள். இந்த வாய்ப்பை நான் எப்படி பார்க்கிறேன் என்று சொன்னால் கோவையில் கடந்த தேர்தலில் 10 தொகுதிகளிலும் வெற்றி வாய்ப்பை இழந்திருக்கின்றோம், இந்த தேர்தலில் கோவையில் ஒரு மகத்தான வெற்றி பெற வேண்டும் அதற்கான ஒரு வாய்ப்பாக எங்களுடைய கழகத் தலைவர் அவர்கள் வழங்கி இருக்கின்றார்கள், எனவே இந்த நல்ல வாய்ப்பை பயன்படுத்தி கோவை மாவட்டம் முழுவதும் திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலான கூட்டணி ஒரு மகத்தான வெற்றி பெறுவதற்கான பணிகளை மிக வேகமாக முன்னெடுத்து மகத்தான வெற்றியை நாங்கள் பெறுவோம்.*

***கேள்வி : எதிர்க்கட்சிகள் 50,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவோம் என்று சொல்கிறார்கள்?***

*பதில் : அவங்க எப்படி சார், அவங்க தோத்துப் போவோம் என்றா சொல்லுவாங்க, அவங்களுடைய கருத்துக்களை அவங்க சொல்றாங்க, நிச்சயமாக தமிழ்நாட்டு மக்களுடைய எண்ணங்கள் அவர்களுடைய சிந்தனைகள் குறிப்பாக கோவை மாவட்ட மக்களுடைய எண்ணங்கள் சிந்தனைகளை நீங்க பார்த்திருப்பீங்க பல்வேறு இடங்களில் நீங்களும் பல பேர் கருத்து கணிப்புகள் எல்லாம் நடத்தி இருக்கீங்க, மக்களை சந்திச்சிருக்கீங்க, மக்களுடைய எண்ண ஓட்டங்களை, மனநிலைகளை நீங்க நாடி புடிச்சு பார்த்திருக்கிறீங்க, கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையில ஒரே ஒரு உதாரணத்தை மட்டும் உங்களிடத்தில் நான் முன்வைக்கின்றேன், எங்களுடைய கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கோவைக்கு வருகை தந்த பொழுது கோவை மாவட்டத்தில் இருக்கக்கூடிய பம்ப் செட் உற்பத்தியாளர்கள் அவர்களுடைய தொழிலை பாதுகாக்கக் கூடிய வகையில் ஏதேனும் சிறப்பு திட்டங்கள் வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார்கள், அதை ஏற்றுக்கொண்ட எங்களுடைய முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய 20 லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாய மின் இணைப்புகளுக்கு குறிப்பாக புதிய பம்ப் செட் வழங்கப்படும் என்ற ஒரு மகத்தான தேர்தல் வாக்குறுதியை வழங்கி இருக்கின்றார்கள். இதில் இரண்டு வகை, ஒன்று விவசாயிகள் பயன்பெறுவது இரண்டாவது கோவை மாவட்டத்தில் இருக்கக்கூடிய அந்த பம்ப் செட் உற்பத்தியாளர்களுடைய வாழ்வாதாரத்தை பாதுகாக்கக் கூடிய மிகப்பெரிய ஒரு அறிவிப்பாக பார்க்கின்றேன்,*

*நேற்று என்னிடத்தில் தொழில்முனைவர்கள் பேசுகின்ற பொழுது இரண்டு மனுக்களை முதலமைச்சரிடம் கொடுத்தோம் நாங்களே எதிர் பார்க்கவில்லை இப்படி ஒரு மகத்தான அறிவிப்பு தேர்தல் அறிக்கையிலே வரும் என்று நாங்கள் நினைத்துப் பார்க்கவில்லை என்று சொன்னார்கள், அந்த அளவிற்கு முதலமைச்சர்கள் ஒவ்வொரு திட்டங்களாக பார்த்து செயல்படுத்தி இருக்கின்றார்கள், இப்போது அறிக்கையிலும் கொடுத்திருக்கின்றார்கள். அந்த வகையில் கோவை மாவட்டத்தினுடைய தொழில்வளத்தை பாதுகாக்கக் கூடிய முதலமைச்சராக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செயல்பட்டு கொண்டிருக்கின்றார்கள். திராவிட மாடல் 2.0 ஆட்சியிலும் கோவை மாவட்டம் நிச்சயமாக வளர்ச்சி பெறும்.*

*தெற்குல இருந்து எதுக்கு வடக்குக்கு போனாங்க? நீங்க திருப்பி கேள்வி கேட்கணும் சார், ஒரு கேள்வியோட வந்து நீங்க, அவங்க கேட்ட கேள்விகளுக்கு தெற்கிலிருந்து அப்ப தெற்குனா அவங்களுக்கு அ.தி.மு.க. வேட்பாளர் போட்டுட்டாங்கல, வேட்பாளர் போட்டுட்டாங்களா இல்லையா? அப்ப அவங்களுக்கு இல்லன்னு தானே அர்த்தம், வேட்பாளர் எங்க போடல, வடக்குக்கு போடல வடக்கு எந்த கட்சிக்கு கொடுத்திருக்காங்க? பி.ஜே.பிக்கு கொடுத்திருக்காங்க அப்ப யாரு வேட்பாளரா இருக்கும், தெற்கிலே இருக்கிறவங்க எதனால வடக்குக்கு போனாங்க அந்த கேள்வியை திருப்பி அவங்க கிட்ட கேள்வி கேட்டீங்கன்னா பரவாயில்லை, நான் எப்பொழுதும் தேர்தல் களத்தை பொறுத்தவரைக்கும் பயந்ததும் இல்ல, பின்னோக்கி போனதும் இல்ல, கரூரில் எம்.எல்.ஏ., வாக இருந்தேன், அரவக்குறிச்சிக்கு போக சொன்னாங்க, அரவக்குறிச்சிக்கு போனேன் அங்கேயும் தேர்தல்ல வெற்றி பெற்றேன், திரும்ப கரூருக்கு வந்தேன், திரும்ப கரூர்ல வெற்றி பெற்றேன், ஆகையால கோவையை பொறுத்தவரை எனக்கு கரூர் வேற இல்ல, கோவை வேற இல்ல, ஏற்கனவே எங்களுடைய கழகத்தினுடைய வழிகாட்டுதலின் படி கோவையிலே அரசினுடைய பணிகளையும், இயக்கத்தினுடைய பணிகளையும் நின்று முன்னெடுத்து இருக்கின்றோம், ஆக அனைத்து பகுதிகளும் நன்கு அறிவேன். கோவையை பொறுத்தவரை என்னுடைய சொந்த ஊரை போல மக்கள் என்னை அன்போடு உபசரித்திருக்கின்றார்கள், இருக்கக்கூடிய கழகத்தினுடைய தலைவர்களும் அன்போடு பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். நிச்சயமான ஒரு வெற்றியை தருவதற்கு மக்கள் தயாராக இருக்கின்றார்கள்.*

***கேள்வி : தேர்தல் அறிக்கை தவிர மக்கள் வந்து திமுக கூட்டணிக்கு வாக்களிக்க என்ன மாதிரியான உத்திகளை கொடுத்திருக்காங்க?***

*பதில்: உத்திகளை உங்க கிட்ட சொல்லிட்டா அதுக்கு பேரு உத்தியே கிடையாது.*

***கேள்வி : அவங்க அ.தி.மு.க. கோட்டை என்று சொல்லிக்கிட்டு இருக்காங்க? அதை திமுக கோட்டை மாத்துறதுக்கு என்ன பண்ண போறீங்க?***

*பதில் : 2021 சட்டமன்ற தேர்தல்ல ஒரு தொகுதியில் 1,000 ஓட்டு, இன்னொரு தொகுதியில் 1,700 ஓட்டு, இன்னொரு தொகுதியில் 4,000 ஓட்டு இன்னொரு தொகுதியில் 8,000 ஓட்டு இன்னொரு தொகுதியில் 10,000 ஓட்டு, 2021 தேர்தலுக்கு பிறகு அ.தி.மு.க. வளர்ந்திருக்கா? 2021 சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு அண்ணா தி.மு.க. வளர்ச்சி பெற்றிருக்கிறதா? அல்லது ஏதேனும் லட்சக்கணக்கான மக்கள் போய் அந்த இயக்கத்துல உறுப்பினர்களா சேர்ந்து இருக்காங்களா? எந்த வகையில வந்து கோவை அண்ணா தி.மு.க வினுடைய கோட்டை அவங்க சொல்றாங்க? அதையும் நீங்க கேட்டு திருப்பி இந்த கேள்வியை அடுத்த முறை பார்க்கும்போது கேளுங்க, 2021 தேர்தலுக்கு பிறகு எவ்வளவு பேர் உங்களுடைய உறுப்பினர் எண்ணிக்கை கூடி இருக்கிறது? எவ்வளவு பேர் உங்க இயக்கத்திலே சேர்ந்திருக்கின்றார்கள்? வளர்ச்சி அடைந்திருக்கிறதா உங்க கட்சி அப்படிங்கறத கேட்டீங்கன்னா அவங்க பதில் சொல்லுவாங்க, வழக்கமா சொல்ற வார்த்தை அது அண்ணா தி.மு.க. கோட்டை அதெல்லாம் உள்ளாட்சி தேர்தலையே நம்ம பார்த்தோம், நாடாளுமன்ற தேர்தலில் நம்ம கூட இருந்து பார்த்த எல்லாமே எப்படி மக்கள் வாக்களித்தாங்கிறது நான் உள்ளாட்சி தேர்தலுடைய வெற்றி, நாடாளுமன்ற தேர்தலுடைய வெற்றி இந்த சட்டமன்ற தேர்தலிலும் கோவையில் தொடரும். பிரதான வாக்குறுதிகள் அதாவது ஒரே நாள்ல எல்லாத்தையும் சொல்லிட்டோம்னா செய்திக்கு சுவாரசியம் இருக்காது, எடுக்கக்கூடிய பணிகளுக்கு சிறப்பு இருக்காது, இன்னைக்கு அலுவலகம் திறந்திருக்கிறோம் நிறைய சிறப்பு திட்டங்கள் நாங்க முன்னெடுக்க போறோம்.*

*குறிப்பாக கோவையினுடைய வளர்ச்சியில் சிறப்பு கவனங்களை செலுத்த போறோம். இப்போதுதான் செம்மொழி பூங்காவை முதலமைச்சர் அவர்கள் திறந்து வச்சிருக்காங்க, கோவைக்கு நிறைய திட்டங்களை கொடுத்திருக்காங்க, இன்னும் பல வளர்ச்சி திட்டங்களை கொடுக்க போறாங்க.*

***கேள்வி : கோவைக்கான திட்டங்களை தி.மு.க. செயல்படுத்தலன்னு சொல்லித்தான் அ.தி.மு.க. கூட்டணி கட்சியும் பிரதானமா பிரச்சாரம் பண்றாங்க அதை எப்படி தி.மு.க. கூட்டணி எதிர்கொள்ள போகுது?***

*பதில் : ஏர்போர்ட் விரிவாக்கத்துக்கு நிதி கொடுத்து அந்த நிலத்தை எடுத்துக் கொடுத்தது யாரு தி.மு.க. அரசாங்கம், எங்களுடைய முதலமைச்சர். அதேபோல ஜி.டி நாயுடு மேம்பாலம் அவிநாசி சாலையில கட்டி முடிச்சு திறந்து வச்சது யாரு? எங்களுடைய முதலமைச்சர் அவர்கள், நேர் எதிர இருக்கக்கூடிய செம்மொழி பூங்காவை முடிச்சு திறந்து வச்சது யாரு? எங்களுடைய முதலமைச்சர் அவர்கள். தங்க நகை உற்பத்தியாளர்களுடைய கோரிக்கைகளை முன்வைத்து அதற்கான பூங்கா அமைப்பதற்கான பணிகளை தொடங்கி வைத்தவர் யாரு? எங்களுடைய முதலமைச்சர் அவர்கள், இப்படி தொடர்ச்சியாக நான் இன்னும் கூட ஒரு சிறப்பு உங்களுக்கு சொல்லணும்னா கோவை மாநகராட்சியிலே இந்த 5 ஆண்டுகளில் 8,700 கோடி ரூபாய்க்கான வளர்ச்சி திட்ட பணிகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன, ஆகையால் வந்து ஏதாவது சொல்லுகின்ற பொழுது இந்த இந்த திட்டங்கள் எல்லாம் எப்பொழுது வந்தது துங்கிறத மறு கேள்வி கேட்டீங்கன்னா அவங்க பதில் சொல்லுவாங்க, சொல்லுகிறது மட்டும் இப்ப என்கிட்ட கேட்கிற மாதிரி அவங்க கிட்டயும் கேள்வி கேளுங்க? பி.ஜே.பிலயும் கேளுங்க, அ.தி.மு.கவையும் கேளுங்க, ஏதாவது சொன்னாங்கன்னா அதுக்கு நாங்க பதில் சொல்றோம்.*

***கேள்வி : டி.வி.கே. உங்களுக்கு ஏதாவது போட்டியா இருக்குமா?***

*பதில் : ஒவ்வொரு கட்சியும் தேர்தலிலே வெற்றி பெறணும் அப்படிங்கிற முனைப்போடு தான் வேட்பாளர்கள் அறிவிப்பாங்க, தேர்தல் களத்துக்கு போவாங்க, வெற்றி யாருக்குங்கிறத வாக்காளர் பெருமக்கள் தீர்மானிப்பாங்க, ஆனா நாங்கள் முன்னெடுப்பது எங்களுடைய முதலமைச்சருடைய சாதனைகளை சொல்லி வாக்குகளை சேகரிக்க போகின்றோம். அந்த திட்டங்கள் மூலம் மக்கள் பயன்பெற்றாங்க, அவங்களிடத்திலே எங்களுக்கு வாக்களிக்க ஆதரவு கேட்க போறோம், ஆகையால் அரசு திட்டத்தின் மூலமாக பயன்பெற்றவர்கள், இந்த அரசின் மூலமாக தொடர்ந்து பயன்பெறக் கூடியவர்கள் இவர்கள் எல்லாம் நாங்கள் முன்னெடுத்து வாக்காளர்களாக எங்களுடைய வாக்குகளாக மாற்ற இருக்கின்றோம் அந்த வகையில வந்து நிச்சயமாக நீங்க பொறுத்திருந்து பாருங்க 4ம் தேதி வாக்கு எண்ணிக்கை, நானும் உங்களோட தான் இருப்பேன், நீங்களும் எங்களோட தான் இருப்பீங்க, அன்னைக்கு வாக்கு எண்ணிக்கை ரிசல்ட் நீங்களே பார்ப்பீங்க, எப்படி இருக்கு, யாரோட கோட்டை என்பது தெரியும்.*

***கேள்வி : அ.தி.மு.க. வேட்பாளர் 50,000 வாக்கு வித்தியாசத்தில் ஜெயிப்போம் என்று சொல்றாங்க, நீங்க வந்து என்ன சொல்றீங்க, உங்களோட வெற்றி எப்படி இருக்கும்னு நினைக்கிறீங்க?***

*பதில் : போன தேர்தல்ல அவங்க இந்த தெற்கு தொகுதியில எவ்வளவு ஆயிரம் ஓட்டுல ஜெயிச்சாங்க சார், ரொம்ப மினிமம், அதுக்கப்புறம் அவங்க கட்சி எவ்வளவு சார் வளர்ந்திருக்கு, யார் சார் ஓட்டு போடுவாங்க, கொஞ்சம் பார்க்க சொல்லுங்க, கிரவுண்ட் எப்படி இருக்கு, மக்கள் மனநிலை எப்படி இருக்குன்னு பார்க்க சொல்லுங்க, சொல்றது சொல்லலாம் உங்ககிட்ட கூட நாங்க கூட சொல்லலாம் ஒரு லட்சம் ஓட்டுல ஜெயிப்பேன்னு இருக்கிற ஓட்டே 186000 இருக்கிற ஓட்டே 1,86,000 ஓட்டு இருக்கு, நான் ஒரு லட்சம் ஓட்டுல ஜெயிப்பேன்னா, நம்பக் கூடியதா இருக்குமா, இருக்காதுல்ல, எதார்த்த சூழலில் கள நிலவரங்களை சொல்லணும், அவங்க அவங்களுடைய கருத்தை முன் வைக்கிறாங்க, அப்பதான் அவங்க நிர்வாகிகளை தைரியப்படுத்த முடியும், தெம்பு கொடுக்க முடியும் அதுக்காக அந்த கருத்துக்களை சொல்றாங்க, நான் யாரையும் வந்து குறைச்சு மதிப்பிடவில்லை, எந்த வேட்பாளரையும் குறைச்சு மதிப்பிடவில்லை, யாரையும் நான் குறையும் சொல்வதற்கு இங்கு வரவில்லை, தலைவர் அதுக்கு என்னை அனுப்பி வைக்கவில்லை, நாங்கள் எங்களுடைய, முதலமைச்சருடைய சாதனைகளை மக்களிடத்தில் கொண்டு சென்று சேர்ப்போம், அதை வாக்குகளாக மாற்றி திராவிட முன்னேற்றக் கழகம் "உதய சூரியன்" வெற்றி பெறுவதற்கான பணிகளை முன்னெடுத்திருக்கின்றோம் நிச்சயமாக நாங்கள் வெற்றி பெறுவோம்.*

*இவ்வாறு செய்தியாளர்களிடம் கூறினார்.*



சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சைதை மேற்கு சைதை கிழக்குப் பகுதிகளின் கழக நிர்வாகிகளை கழக வேட்பாளர் மா.சுப்பிரமணியன் நேற்று விஜயராகவலு திருமண மண்டபத்தில் சந்தித்து தேர்தல் பணிகளை சிறப்பாக மேற்கொள்வதற்கு கேட்டுக் கொண்டார். உடன் பகுதி கழக செயலாளர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா.துரைராஜ் உள்ளிட்ட சைதை தொகுதிக்குட்பட்ட நிர்வாகிகள் உள்ளனர்.

திருவாரூர் மாவட்டத்தில்

# ‘திராவிட மாடல்’ அரசின் சாதனைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பட்டியலிட்டு பெருமிதம்!

திருவாரூர், ஏப். 1–

திருவாரூர் மாவட்டத்தில் #DravidianModel அரசின் சாதனைகளின் சிறுதுளி புள்ளிவிவரமாக: கீழ்க்காணும் பட்டியலை வெளியிட்டு பெருமிதம் அடைந்துள்ளார் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.




### திருவாரூர் மாவட்டத்தில் மட்டும்

- கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் மூலம் - 2,63,397 பேரும்
- புதுமைப் பெண் திட்டத்தின் மூலம் - 15,922 பேரும்
- விடியல் பயணம் திட்டத்தின் மூலம் - 6.95 கோடி பேரும்
- நான் முதல்வன் திட்டத்தின் மூலம் - 67,907 பேரும்
- மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் மூலம் - 4,66,764 பேரும்
- நம்மை காக்கும் இன்னுயிர் திட்டத்தின் மூலம் - 15,584 பேரும்
- தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் மூலம் - 12,846 பேரும்
- நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தின் மூலம் - 37,045 பேரும்
- முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் மூலம் - 39,420 பேரும்

என ‘திராவிட மாடல்’ ஆட்சியில் பயன் பெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்காணும் புள்ளி விவரங்களை தனது சமூக வலை தளப் பக்கத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.



ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி 112 வது வட்டத்தில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் ஆயிரம் விளக்கு சட்டமன்ற தொகுதி வெற்றி வேட்பாளர் மருத்துவர் எழிலன் நாகநாதனை ஆதரித்து மு.க.தமிழரசு அவர்கள் வாக்கு சேகரித்தார். உடன் சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே சிற்றரசு, பகுதி கழகச் செயலாளர் ம.ப.அன்பு துரை, பகுதி கழகச் செயலாளர் வினோத் வேலாயுதம், தலைமை செயற்குழு உறுப்பினர் நுங்கை வி.எஸ்.ராஜ், மற்றும் வட்டக் கழகச் செயலாளர் வரதை த.பரி, மற்றும் கூட்டணி கட்சியினர், கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு வாக்கு சேகரித்தனர்.